சார்பு நீதிமன்றம், குளித்தலை.
முன்னிலை – திரு.எம்.சண்முக கனி, பி.ஏ., எல்.எல்.பி.,
சார்பு நீதிபதி, குளித்தலை.
2024–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24–ஆம் தேதி புதன்கிழமை

**அசல் வழக்கு எண்.364/2023**
(CNR No.TNKR080007252023)

கனரா வங்கி, மாயனூர் கிளை சார்பாக
அதன் கிளை மேலாளர் . . . . வாதி

/எதிர்/

P.அல்லிராணி . . . பிரதிவாதி

இவ்வழக்கு கடந்த 08.01.2024–ஆம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.நாகராஜன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், வழக்கு கோப்புகளை பரிசீலித்தும், வாதி தரப்பு வாதுரையை கேட்டறிந்த பின்பும், இதுநாள் வரை இம்மன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**ஒருதலைபட்ச தீர்ப்புரை**

வாதி வங்கி தரப்பில், தாவா தொகை ரூ.**2,52,703/–**ம் அதற்கு தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தி தீரும் தேதி வரை பின்வட்டி மற்றும் வழக்கின் செலவுத் தொகையை பிரதிவாதி, வாதி வங்கிக்கு செலுத்தக் கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்** :-

வாதி வங்கியிடம் பிரதிவாதி மரவள்ளி சாகுபடி செய்வதற்கு கடன் கேட்டு 25.09.2014ம் தேதி கடன் விண்ணப்பம் கொடுத்து பிரதிவாதிக்கு ரூ.1,00,000/– கடன் வழங்கப்பட்டுள்ளது என்றும், 25.09.2014ம் தேதி

பிரதிவாதி, வாதி வங்கிக்கு தாவா கடன் சம்பந்தமான கொதுவை ஒப்பந்தம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அதில் 11.20 சதவீத வட்டி செலுத்த ஒப்புக்கொண்டதாகவும், பிரதிவாதி செலுத்த தவறினால், அவர் 2 சதவீத தாமதமான வட்டியை செலுத்த வேண்டியிருக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதி கடன் பெற்ற நபர் என்ற அடிப்படையில் தாவாவில் சம்மந்தப்பட்ட கடன் பொருத்த தொகையை வாதி வங்கிக்கு செலுத்த கடமைப்பட்டவர் என்றும், பிரதிவாதி, வாதி வங்கிக்கு 24.09.2017 மற்றும் 26.08.2020 ஆகிய தேதிகளில் கடன் உயிர்ப்பு கடிதம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், பிரதிவாதி பெற்ற கடனை திரும்ப செலுத்தக்கோரி வாதி வங்கி பலமுறை கேட்டும் பிரதிவாதி தொகையை செலுத்தாமல் காலம் கடத்தி வந்தார் என்றும், பிரதிவாதி பெற்ற கடன் சம்மந்தமாக வாதி வங்கி விதிமுறைகள் படி பராமரிக்கப்படும் கணக்கின் படி 31.03.2023ம் தேதி பிரதிவாதி பெற்ற கடனில் உள்ள நிலுவை தொகை ரூ.2,52,703/– ஆகும் என்றும், பிரதிவாதி பெற்ற கடனில் உள்ள நிலுவைத் தொகையை பலமுறை கேட்டும், பிரதிவாதி, வாதி வங்கிக்கு கடன் நிலுவைத் தொகையை திரும்ப செலுத்தவில்லை என்றும், ஆகவே, வாதி வங்கி தரப்பில், தாவா தொகை ரூ.**2,52,703/–**ம் அதற்கு தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தி தீரும் தேதி வரை பின்வட்டி மற்றும் வழக்கின் செலவுத் தொகையை பிரதிவாதி, வாதி வங்கிக்கு செலுத்தக் கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இந்த வழக்கில் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், வாதி தரப்பு வழக்கு சாட்சியம் மற்றும் ஆவணங்களின் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று தீர்மானிக்க

வேண்டியுள்ளது. இந்த வழக்கில் வாதி வங்கியின் உதவி மேலாளர் செந்தில் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணம் எதுவும் முன்னிடப்படவில்லை.

3) இந்த வழக்கில் சாட்சியம் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வாதி தரப்பு வழக்கை மறுத்துக் கூற வேண்டிய நிலையில் உள்ள பிரதிவாதி இந்த வழக்கில் ஆஜராகாததால் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் வாதி தரப்பு வழக்கு வா.சா.1ன் சாட்சியத்தின் மூலமாகவும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் மூலமாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. வாதி வங்கிக்கு பிரதிவாதி தாவா தொகை ரூ.**2,52,703/-**ம், மற்றும் அதில் அசல் தொகை ரூ.**1,00,000/-**க்கு தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தி தீரும் தேதி வரை வருடத்திற்கு **6%** பின்வட்டியும் செலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 24–ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

M SHUNMUGA KANI
Digitally signed by M SHUNMUGA KANI
DN: cn=M SHUNMUGA KANI, ou=KARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

**சார்பு நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>வாதி தரப்பு சாட்சியம்</u>** :-

வா.சா.1 செந்தில் (வாதி வங்கியின் உதவி மேலாளர்)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>** :-

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | கடன் விண்ணப்பம் அசல். |
| வா.சா.ஆ.2 | அனுமதி கடிதம் அசல் |
| வா.சா.ஆ.3 | கொதுவை ஒப்பந்தம் அசல் |
| வா.சா.ஆ.4 | உயிர்ப்பு கடிதம் அசல் |
| வா.சா.ஆ.5 | உயிர்ப்பு கடிதம் அசல் |
| வா.சா.ஆ.6 | கணக்கு பட்டியல் உண்மை நகல் |

M SHUNMUGA KANI
Digitally signed by M SHUNMUGA KANI
DN: cn=M SHUNMUGA KANI, ou=KARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

**சார்பு நீதிபதி,**

**குளித்தலை.**

* * * * * * * * * * * * * * * * * *

சார்பு நீதிமன்றம், குளித்தலை.

அசல் வழக்கு
எண்.364/2023

நாள்.24.01.2024

வரைவு / செவ்வை தீர்ப்புரை
* * * * * * * * * * * * * * * * * *